## சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவரின் பயன்பாட்டில் உள்ள TN 25 G 5555 டாடா சுமோ வாகனத்தை முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்ய அனுமதியளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அதி.2) துறை**

அரசாணை (டி) எண்.24 நாள்: 23.01.2017

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.2275 உள்(போக்குவரத்து) துறை நாள் 10.10.1990.
2. மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை, கடிதம் ந.க.அ4/2511/2013 நாள் 15.12.2014.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.84515/14/G2 நாள் 31.12.2014 மற்றும் 30.09.2016.

******

**ஆணை:**

மேலே படிக்கப்பட்டவை மூன்றில் உள்ள கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர் அவர்களின் உபயோகத்திற்காக 2005–ஆம் ஆண்டு ஒரு டாடா சுமோ வாகனம் (பதிவு எண் TN 25 G 5555) மாவட்ட வளர்ச்சி முகமை நிதியிலிருந்து வாங்கப்பட்டது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அலுவலக பயணங்கள் மிகுதியால் 189035 கி.மீ. தூரம் ஓடியுள்ள நிலையில், இவ்வாகனத்தினை தொழில் நுட்ப வல்லுநர் குழு ஆய்வு செய்ததில் வாகனத்தில் பெரும்பழுதுகள் பார்க்க வேண்டிய நிலை இருப்பதாகவும், இதனை பழுது நீக்கம் செய்து ஓடும் நிலைக்கு கொண்டுவர அதிக செலவினம் பிடிக்கும் என்பதால் பழுதுகள் பார்ப்பது சிக்கன நடவடிக்கையாக இராது எனத் தெரிவித்து இவ்வாகனத்தினை முதிரா நிலையில் கழிவு செய்யலாம் என வேலூர் தானியங்கி பணிமனை பொறியாளர் பரிந்துரை செய்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், சென்னை மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநர் அவர்களும் மேற்கண்ட பரிந்துரையை ஏற்று இவ்வாகனத்தை முதிரா நிலையில் கழிவு செய்ய அரசின் ஆணையை பெற்று அனுப்ப கோரியுள்ள நிலையில் இவ்வாகனத்தை முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்ய அனுமதித்து ஆணையிட திருவண்ணாமலை மாவட்டாட்சியர் கேட்டுக் கொண்டுள்ளதாகவும், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவரின் கோரிக்கையினை ஏற்கலாம் என ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணைப்படி வாகனம் முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்ய, மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநரால் பரிந்துரைக்கப்பட்டிருப்பின், துறைத் தலைவர் மூலமாக அரசுக்கு கருத்துரு அனுப்பி, வாகனம் கழிவு நீக்கம் செய்ய ஆணை பெறப்பட வேண்டும்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்விற்குப்பின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று திருவண்ணாமலை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மாவட்ட ஆட்சித் தலைவர் / பெருந்தலைவர் அவர்களின் அலுவலக பயன்பாட்டில் உள்ள வாகன எண்.TN25 G 5555-ஐ முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்யலாம் எனவும் பின் இவ்வாகனத்தை ஏலத்தில் விடப்படுவதின் மூலம் கிடைக்கும் தொகையான ரூ.69,000/–ஐ உடனடியாக அரசுக் கணக்கில் செலுத்திட வேண்டும் என்ற நிபந்தனையுடன் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை.
இயக்குநர், தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை, சென்னை–42.
மாநில கணக்காயர், சென்னை – 18.
மாவட்ட கருவூல அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்,
திருவண்ணாமலை.

<u>நகல்</u>
நிதி (ஊ.வ) துறை, சென்னை – 9.
உள்(போக்குவரத்து–4) துறை, சென்னை–9.
மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.